**6. அங்கப்பன் கதை**

ஓர் ஊரில் முதிய செட்டியார் ஒருவர் இருந்தார். அவருடைய பெயர் ஏழுமலை என்பர். அவரிடம் அங்கப் பன் என்னும் பெயருடைய இளைஞன் ஒருவன் பணியாளாக அமர்ந்திருந்தான். செட்டியார் பொருள் தேடும்பொருட்டு இளைஞனோடு வேறொரு நாட்டிற்குச் சென்றார். பொருள் தேடுவதில் நாட்டம் உடைய ஏழுமலைச் செட்டியார் பெரும் பாலும் ஆலம் விழுதைக் கொண்டே பல் விளக்குவது வழக்கம். "வேலுக்குப் பல்லிறுகும் வேம்புக்குப் பல் துலங்கும் பூலுக்குப் போகம் பொழியுமே-ஆலுக்குத் தண்டாமரையாளுஞ் சார்வாளே" என்பது முன்னோர் வாக்கு.வேறு நாட்டை யடைந்த செட்டியார் ஒருநாள் காலையில் எழுந்து அங்கப்ப னோடு காலைக் கடன் முடிக்க ஊர்ப்புறத்தே சென்றார். ஆலமரம் ஒன்றைத் தொலைவிற்கண்டு, "அதோ ஆலமரம் இருக்கிறது” என்று சொன்னார். இளைஞனான அங்கப்பனோ இன்ப நாட்டம் உடையவன். அவன் வேறோர் இடத்தில் இருந்த பூலாமரம் ஒன்றைச் செட்டியாருக்குச் சுட்டிக் காட்டி அதோ பூலாமரம் இருக்கிறது" என்று சொன் னான். அது முதல் இளைஞனுக்குச் செட்டியார், "ஆல் என்னில் பூல் என்னும் அங்கப்பன்" என்று பெயர் வைத்து விட்டார். ஒரு காரியத்தைச் செய்யுமாறு ஒருவர் ஏவ அதற்கு நேர்மாறாகப் பேசுபவர்களுக்கு "ஆலென்னிற் பூ லென்னுமாறு" என்னும் பழமொழி அமைந்துவிட்டது.



[தந்நலம் நாடுதல்] (பழமொழி)